

# கலைஞர்

## மாணவப் பத்திரிகையாளர் திட்டம்

**2025-2026**

திராவிட இயக்கத்துக்கும் இதழியலுக்குமான உறவு நூற்றாண்டைக் கடந்தது. திராவிட இயக்கங்களின் தாய் அமைப்பான, 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்', தான் தொடங்கிய 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில இதழின் பெயராலேயே ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என்றும் தமிழில் 'நீதிக்கட்சி' என்றும் அழைக்கப்பட்டது.

சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, சுயமரியாதை, பெண்ணுரிமை ஆகியவற்றைத் தமிழ் மக்களிடம் பரப்புவதற்காக 'குடி அரசு' இதழைத் தொடங்கினார் தந்தை பெரியார். 'திராவிட நாடு' இதழில் பேரறிஞர் அண்ணா, தன் 'தம்பிகளுக்கு' எழுதிய கடிதங்களில் அரசியல், உலக வரலாறு, இலக்கியம், தத்துவம் ஆகியவற்றைப் பதிவு செய்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் சிறுவனாக இருந்தபோதே 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்துப் பத்திரிகையை நடத்தினார். பிறகு 'முரசொலி' இதழைத் தொடங்கிய கலைஞர், கட்டுரைகள், கார்ட்டூன்கள், உடன்பிறப்புகளுக்கு கடிதங்கள் என்று அதை அரசியல் ஆயுதமாகவே மாற்றினார். 'குடி அரசு', 'உண்மை', 'விடுதலை', 'திராவிட நாடு', 'முரசொலி', 'மன்றம்', 'நம்நாடு', 'மாலைமணி', 'Homeland', 'Rising Sun' என்று நூற்றுக்கணக்கான திராவிட இயக்க இதழ்கள் வெளியாகின.

காலத்துக்கேற்றவாறு தன்னைப் புதுப்பித்துக்கொள்ளவும் திராவிட இயக்கம் தவறியதில்லை. 'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சியைத் தொடங்கியதுடன், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களில் முதன்முதலாக சமூகவலைதளங்களில் கணக்கு துவங்கி, அவ்வப்போதைய தன் அரசியல் நிலைப்பாடுகளை அழுத்தமாகப் பதிவு செய்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.

அவர் வழியில் கழகத்தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கழக இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் சமூக வலைதளத்தில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நிலைப்பாடுகளைப் பதிவுசெய்து வருகின்றனர். இணைய மற்றும் காணொலித் தளங்களிலும் தொடர்ச்சியாகத் திராவிட இயக்கக் கருத்துகள் பதியப்பட்டு பரவலான வரவேற்பு பெறுவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இத்தகைய பாரம்பரியமிக்க திராவிட இயக்க இதழியல் வரலாற்றில், உங்களையும் இணைத்துக்கொள்ள ஒரு மகத்தான வாய்ப்பு.

'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சியும், 'முரசொலி' நாளிதழும் இணைந்து 'கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்' என்னும் மகத்தான முயற்சியை முன்னெடுக்கின்றனர்.

இந்த திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி பெறுவதன் மூலம் நீங்கள் 'முரசொலி' மற்றும் 'கலைஞர் தொலைக்காட்சி' போன்ற பெரும் ஊடகங்களிலும் அவை சார்ந்த இணையதளங்கள் மற்றும் சமூக வலைதளங்களிலும் செய்தியாளர், புகைப்படக் கலைஞர், டிசைனர், எடிட்டர், ஒளிப்பதிவாளராக ஓராண்டு பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெறுவீர்கள். நீங்கள் மாணவப் பத்திரிகையாளராகப் பயிற்சி பெறும்போது மதிப்பூதியமும் வழங்கப்படும்.

### செய்தியாளர் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள்

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில், 1,000 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதி அனுப்பவும். தாளின் ஒருபக்கத்தில் மட்டும் எழுதவும். எழுதுவது முழுக்க உங்கள் சொந்த முயற்சியாக இருக்கவேண்டுமே தவிர, ஏதேனும் புத்தகத்தில் இருந்தோ, இணையத்தில் இருந்தோ எடுத்து அப்படியே பயன்படுத்தக்கூடாது.

### தலைப்புகள்

- **திராவிடத்தால் வாழ்கிறோம்** – திராவிட இயக்கம் தோன்றிய சூழல், திராவிட இயக்கத்தின் வரலாறு, தமிழர்கள் வாழ்வில், திராவிட இயக்கம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து எழுத வேண்டும்.
- **தமிழ் எங்கள் உயிருக்கு நேர்** – மொழிப்போர் வரலாறு, தமிழுணர்வின் அவசியம், திராவிட இயக்கம் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள், இன்றும் தொடரும் மொழிப்போர் ஆகியவை குறித்து எழுதவேண்டும்.
- **ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி** – இந்தியா என்பது, எப்படி மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கிறது, மாநில சுயாட்சியின் அவசியம், கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படைகள் ஆகியவை குறித்து எழுத வேண்டும்.
- **திருப்பங்கள் ஏற்படுத்திய திராவிட அரசுகள்** – பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் அரசுகள் செய்த சாதனைகள், அதனால் பலனடைந்த தமிழ்நாடு குறித்து எழுத வேண்டும்.
- **நூற்றாண்டு நாயகர் கலைஞர்** – கலைஞர் என்னும் மாபெரும் ஆளுமையின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் வகையில் எழுத வேண்டும்.

### புகைப்படக் கலைஞர், ஒளிப்பதிவாளர் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள்

நீங்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பிற்கு ஏற்ற படைப்புகளை (புகைப்படங்கள், காணொலிக் காட்சிகள்) 88071-93390 என்ற வாட்ஸ் அப் எண்ணுக்கோ அல்லது kalaignarstudentjournalist@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பவும்.

### தலைப்புகள்

- **எங்கள் ஊரில் திராவிட இயக்கம்** ● **திராவிட மாடல் அரசு – எல்லாருக்கும் எல்லாம்** ● **கலைஞர்–நவீன தமிழ்நாட்டின் சிற்பி**

### டிசைனர் மற்றும் வீடியோ எடிட்டர் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள்

நீங்கள் வடிவமைத்த ஆக்கங்கள் மற்றும் எடிட் செய்த வீடியோக்களை மேற்கண்ட வாட்ஸ்அப் எண் அல்லது மெயில் ஐ.டி.க்கு அனுப்பி வைக்கவும்.

### கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் பங்கேற்பதற்கான விதிமுறைகள்

- இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவ-மாணவியர், தற்போது கல்லூரியில் படிப்பவராகவும், அடுத்த ஆண்டும் கல்லூரிப் படிப்பைத் தொடர்பவராகவும் இருக்க வேண்டும். கல்லூரியில் எந்தப் பிரிவிலும் இறுதி ஆண்டு படிப்பவர்கள் விண்ணப்பிக்க இயலாது.
- நேரடிப் படிப்பு அல்லாத தொலைதூர / இணையவழி கல்வி பயில்பவர்கள், இந்தத் திட்டத்தில் கலந்துகொள்ள இயலாது.
- இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத் தாளைத் தமிழில் பூர்த்திசெய்து, உங்கள் படைப்புகளை இணைத்து, எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். அல்லது QR code-ஐ பயன்படுத்தி, ஆன்-லைனில் விண்ணப்பித்து, அதனுடன் உங்கள் படைப்புகளைப் பதிவேற்றலாம்.

விண்ணப்பத்தைப் பிரதி எடுத்தும் பயன்படுத்தலாம். தகவல் தொடர்புக்காக உங்களுடைய அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி அவசியம் தேவை.

### விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள் : 08.09.2025

● எந்தக் காரணம் கொண்டும் படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. அஞ்சல்தலைகளை இணைக்கத் தேவையில்லை. இந்தத் திட்டம் தொடர்பாக, எந்தவிதமான கடிதம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பும் வைத்துக்கொள்ள இயலாது. ● நீங்கள் எழுதி அனுப்பும் கட்டுரைகளின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அடுத்தகட்டமாகத் தமிழ்நாட்டின் முக்கியமான நகரங்களில் இரண்டாம் கட்டத் தேர்வு நடைபெறும். அது குறித்த தகவல் தங்களுக்குத் தெரிவிக்கப்படும். ● எங்களிடமிருந்து இரண்டாம் கட்டத் தேர்வுக்கான அழைப்பு கிடைக்கப்பெறாதவர்கள், முதற்கட்டப் பரிசீலனையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுகிறோம். இரண்டாம் கட்டத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், இறுதிக்கட்ட நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள வேண்டும். ● மூன்று கட்டத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெறுபவர்கள், மாணவப் பத்திரிகையாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்,
அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

**ஆன்-லைனில் விண்ணப்பிக்க: www.kalaignarstudentjournalist.com**

**மொபைலில் விண்ணப்பிக்க:**

உங்கள் ஸ்மார்ட்போனில் அருகே உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்.




## கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்

**2025-2026**

### விண்ணப்பப் படிவம்

| | |
|---|---|
| பெயர் | : .................................................... |
| தந்தை / பாதுகாவலர் பெயர் | : .................................................... |
| வயது | : ........... பிறந்த தேதி : ......../........./......... |
| முகவரி | : .................................................... |
| வாட்ஸ்-அப் எண் | : .................................................... |
| மின்னஞ்சல் முகவரி | : .................................................... |
| பாலினம் | : ஆண்/பெண்/திருநர் (டிக் செய்யவும்) |
| கல்லூரி/பாடப் பிரிவு/ஆண்டு | : .................................................... |
| கல்லூரி முகவரி | : .................................................... |
| உங்கள் பெற்றோர் அல்லது உறவினர் பத்திரிகைத் துறையில் உள்ளனரா? ஆம், எனில், அது குறித்த விவரம் | : .................................................... |
| ஏதாவது ஒரு கட்சி அல்லது அமைப்பில் உறுப்பினராக இருக்கிறீர்களா? ஆம், எனில், அது குறித்த விவரம் | : .................................................... |
| பத்திரிகைகளில் எழுதிய அனுபவம் உண்டா? ஆம், எனில், அது குறித்த விவரம் | : .................................................... |
| நீங்கள் பயிற்சி பெற விரும்பும் பிரிவு | : செய்தியாளர் / புகைப்படக் கலைஞர் / ஒளிப்பதிவாளர் / டிசைனர் / வீடியோ எடிட்டர் (டிக் செய்யவும்) |
| உங்களுக்குத் தொழில்முறை கேமரா இயக்கும் அனுபவம் உண்டா? ஆம், எனில், அது குறித்த விவரம் | : .................................................... |
| சமூக ஊடகக் கணக்கு வைத்திருப்பின் அவற்றின் URL | : .................................................... |

நான் அளித்துள்ள மேற்கண்ட தகவல் அனைத்தும் உண்மையானவை என்று உளமார உறுதி கூறுகிறேன்.

இடம் : இப்படிக்கு,

தேதி :

## இன்றே விண்ணப்பிப்பீர்... திராவிட இதழியல் வரலாற்றில் இணைவீர்!